15.09.2015

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி

வங்கக் கடலில் புதிதாக குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரி ஒருவர் கூறியதாவது: வெப்பச் சலனம் காரணமாக, தமிழகம், புதுச்சேரியில் ஆங்காங்கே மழை பெய்து வருகிறது.

தென் மேற்குப் பருவ மழை கர்நாடகம், கேரளம், ஆந்திரம், தெலங்கானா ஆகிய மாநிலங்களில் தீவிரம் அடைந்துள்ளது. காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி: இந்த நிலையில், மேற்கு மத்திய வங்கக் கடலில், வட மேற்குப் பகுதியில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாகி இருக்கிறது.

இந்தக் குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி இன்னும் வலுவடையவில்லை. இருப்பினும், ஓரிரு நாள்களில் வலுவடையும் என எதிர்பார்க்கிறோம்.

வலுவடைந்த பின்னரே, எந்தத் திசை நோக்கி நகர்கிறது என்பதைப் பொருத்து, தமிழகத்தில் மழை பெய்யுமா என்பதைக் கூற முடியும். காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியானது, தற்போது தொடக்க நிலையில் உள்ளதால் புயலாக மாறுமா என்பதையும் உறுதிப்படுத்த முடியாது. அடுத்த 24 மணி நேரத்தில், தமிழகம், புதுச்சேரியில் ஆங்காங்கே

இடியுடன் கூடிய மழை பெய்வதற்கான வாய்ப்புள்ளது. சென்னை மாநகரைப் பொருத்தவரை, வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில், நகரின் ஒரு சில பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யும். நகரின் அதிகபட்ச வெப்பநிலை 93 டிகிரியாக இருக்கும் என்றார் அவர்.

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைவு**

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 2,147 கனஅடியாகவும், அணையின் நீர்மட்டம் 76.78 அடியாகவும், நீர் இருப்பு 38.82 டி.எம்.சி.,யாகவும் உள்ளது.

மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக வினாடிக்கு 15 ஆயிரம் கனஅடி நீரும், அணையிலிருந்து கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்திற்காக 700 கனஅடி நீரும் திறக்கப்பட்

**இயற்கை விவசாய பயிற்சி**

தேனி அருகே ஸ்ரீரங்காபுரத்தில் பாரதீய கிசான் சங்கம் சார்பில் இயற்கை முறை விவசாயம் குறித்து விவசாயிகளுக்கு ஞாயிற்றுக்கிழமை பயிற்சி அளிக்கப்பட்டது.

இதற்கு பாரதீய கிசான் சங்க அகில இந்திய பொறுப்பாளர் பெருமாள் தலைமை வகித்தார். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் எஸ்.சி.பாலகிருஷ்ணன் வரவேற்றார். மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் ஆர்.நாட்ராயன், பண்ணைப்புரம் இயற்கை வேளாண்மை ஒருங்கிணைப்பாளர் வி.சண்முகா ஆகியோர் முன்னிலை வகித்தனர். நீர் மேலாண்மை, மண் பாதுகாப்பு, மூலிகை பூச்சி விரட்டிகள், பஞ்சகவ்யம், மண்புழு உரம் உற்பத்தி, நாட்டுப் பசு வளர்ப்பு ஆகியவை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

**இயந்திரம் மூலம் நாற்று நடவுக்கு விவசாயிகளுக்கு மானியம்**

விருதுநகர் மாவட்டத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் சார்பில் இயந்திரம் மூலம் நெற்பயிரிடும் பணியை மேற்கொள்வதற்கு 4900 ஹெக்டேர் வரையில் விவசாயிகளுக்கு மானியம் அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக வேளாண்மைத்துறை இணை இயக்குநர் எஸ்.கனகராஜன் தெரிவித்தார்.

இம்மாவட்டத்தில் நெல் சாகுபடி செய்யும் பணியை ஊக்குவிப்பதற்காக விவசாயிகளுக்கு அரசு பல்வேறு மானியத் திட்டங்களை வழங்கி வருகிறது. நெல் நடவின்போது ஏற்படும் ஆள்கள் பற்றாக்குறையை தவிர்க்கவும், நவீன சாகுபடி உத்திகளை பயன்படுத்தும் வகையிலும் இயந்திரம் மூலம் நடவு மேற்கொள்ள விவசாயிகளுக்கு அரசு மானியம் அளிக்கிறது.

ஒரு ஹெக்டேருக்கு ரூ.3 ஆயிரம் வரையில் மானியம் அளிக்கப்படுகிறது. இதேபோல் மாவட்டம் முழுவதும் 4900 ஹெக்டேருக்கு வழங்கப்பட இருக்கிறது. இயந்திரம் மூலம் பணிகள் மேற்கொள்வதால் சாகுபடி செலவு குறைவதுடன், நடவுப்பணியும் துரிதமாக மேற்கொள்ள முடியும்.

மேலும், 10 ஆண்டுகளுக்குள்பட்ட சான்று பெற்ற விதைகளுக்கு விநியோக மானியமாக ரூ.10ம், உயர் விளைச்சல் தரும் சான்று பெற்ற நெல் விதைகளை உற்பத்தி செய்வதற்கு, உற்பத்தி மானியமாக ரூ.5ம் வழங்கப்படுகிறது. இச்சலுகைகளை பெற விரும்பும் விவசாயிகள் தங்களுக்கு அருகில் உள்ள வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகி பயன்பெறலாம் என அவர் தெரிவித்தார்.

## பால் குளிரூட்டும் நிலையம் திறப்பு

பவானியை அடுத்த பட்லூரில் தமிழக அரசின் சார்பில் ரூ. 33 லட்சத்தில் கட்டப்பட்ட 5000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் குளிரூட்டும் நிலையத்தின் திறப்பு விழா திங்கள்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு, ஈரோடு ஆவின் தலைவர் பி.சி.ராமசாமி தலைமை வகித்தார். துணைத் தலைவர் வி.ஏ.சுப்பிரமணியம் முன்னிலை வகித்தார்.

இம்மையத்தில், பட்லூர், ஒலகடம், கன்னப்பள்ளி, பூனாச்சி, அண்ணாமடுவு உள்ளிட்ட 7 கிளைச் சங்கங்களில் கொள்முதல் செய்யப்படும் பால் இருப்பு வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சியில், அம்மாபேட்டை ஒன்றிய அதிமுக செயலர் வி.எஸ்.சரவணபவா, பட்லூர் ஊராட்சித் தலைவர் இந்திராணி ஸ்ரீதர், ஆவின் பொதுமேலாளர் சுகுமார், பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ரங்கசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**வாழைத்தார் விலை 50 சதம்வரை உயர்வு**

பரமத்தி வேலூர் ஏலச் சந்தையில் வாழைத்தார் விலை 50 சதம் உயர்ந்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

பரமத்தி வேலூர் காவிரி கரையோரப் பகுதிகளில் 5 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமாக விவசாயிகள் வாழை சாகுபடி செய்துள்ளனர். இங்கு விளையும் வாழைத்தார்கள் கேரளம், கர்நாடகம், ஆந்திரம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும், சேலம், கோவை, ஈரோடு, கரூர், திண்டுக்கல் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும் தினமும் லாரிகளில் கொண்டு செல்லப்படுகின்றன.

மேலும், சிறு விவசாயிகளும் ஏலச் சந்தைக்கு வாழைத்தார்களை நேரடியாக விற்பனை செய்து வருகின்றனர். இதனால், விவசாயிகள் ஏராளமான வாழைத்தார்களை ஏலச் சந்தைக்கு கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். கடந்த வாரம் 1,500 வாழைத்தார்களை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

இந்த நிலையில், திங்கள்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு 800 வாழைத்தார்கள் விற்பனைக்கு வந்தன. கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் பூவன் ரூ.200-க்கும், ரஸ்தாலி ரூ.300-க்கும், பச்சைநாடன் ரூ.250-க்கும், கற்பூரவள்ளி ரூ.200-க்கும் ஏலம் போனது. மொந்தன் வாழைக்காய் ஒன்று ரூ.4-க்கும் ஏலம் போனது.

திங்கள்கிழமை நடைபெற்ற ஏலத்தில் பூவன் ரூ.300-க்கும், ரஸ்தாலி ரூ.350-க்கும், பச்சைநாடன் ரூ.300-க்கும், கற்பூரவள்ளி ரூ.300-க்கும் ஏலம் போனது. மொந்தன் வாழைக்காய் ஒன்று ரூ.6-க்கு விற்பனையானது.

கடந்த வாரத்தை விட திங்கள்கிழமை நடைபெற்ற ஏலத்தில் வாழைத்தார்களின் வரத்து குறைந்த போதும், விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு, விலை உயர்ந்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

**தாது உப்புச் சத்து குறைந்தால் கால்நடைகளுக்கு சினை பிடிக்காது**

தாது உப்புச்சத்து குறைந்தால் கால்நடைகளுக்கு சினைப்பிடிக்காது என்றார் சின்னாதாராபுரம் கால்நடை மருத்துவர் மோகன்ராஜ்.

கரூர் அருகே ராஜபுரம் ஊராட்சியில் எலவனூர் கால்நடை மருந்தகம் சார்பில் திங்கள்கிழமை நடைபெற்ற கால்நடைப் பாதுகாப்புத் திட்ட மருத்துவ முகாமுக்கு தலைமை வகித்து மேலும் அவர் பேசுகையில், க. பரமத்தி ஒன்றியப் பகுதியில் போதிய மழை இல்லாததால் கால்நடை வளர்ப்பதையே இப்பகுதி விவசாயிகள் தொழிலாகச் செய்கின்றனர்.

மாடுகள் கன்று ஈன்ற பிறகு மூன்று முறை பருவநிலைக்கு வந்து சினை ஊசி போட்டும் அல்லது காளையுடன் சேர்த்து விட்ட பின்பும் சினை பிடிக்காமல் இருந்தால் அவை மலட்டுதன்மை மாடுகளாகக் கருதப்படுகின்றன.

எனவே பாதிக்கப்பட்ட கால்நடைகளை அருகேயுள்ள அரசு கால்நடை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று மருத்துவரின் உரிய ஆலோசனையை பின்பற்ற வேண்டும்.

பெரும்பாலும் மாடுகளுக்கு தாது உப்புச் சத்து பற்றாக்குறைவால்தான் சினை தாமதமாகிறது. எனவே இதற்கு அரசு கால்நடை மருந்தகங்களைத் தொடர்பு கொண்டு அங்கு குறைபாடுள்ள கால்நடைகளுக்கு வழங்கப்படும் தாது உப்பு கலவையை மருத்துவரின் ஆலோசனைப்படி அன்றாடம் ஒரு மாதத்துக்கு மாடுகளுக்கு வழங்குவதன் மூலம் மலட்டுத் தன்மையை எளிதில் நீக்கலாம்.

தற்போது கால்நடைப் பராமரிப்புத் துறை சார்பில் கோமாரி நோய் தடுப்பூசி இலவசமாக வழங்க முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டு பசு, எருமைகளுக்கு தடுப்பூசிகள் போடப்படுகிறது.

முகாமில் பண்ணையாளர்கள் அனைவரும் தங்கள் அனைத்து கால்நடைகளுக்கும் கோமாரி நோய் தடுப்பூசியை முன்னெச்சரிக்கையாக போட்டு கால்நடைகளை பாதுகாத்திட வேண்டும். ஏற்கெனவே தடுப்பூசி போட்டிருந்தாலும் மீண்டும் போட வேண்டியது அவசியம் என்றார்.

முன்னதாக கால்நடை ஆய்வாளர் ஜானகி வரவேற்றார். ஒன்றிய கவுன்சிலர் கலையரசி முன்னிலை வகித்தார். ஊராட்சித் தலைவர் பழனிச்சாமி முகாமை தொடங்கி வைத்து சிறந்த கலப்பின கிடாரிகள் வளர்த்த விவசாயிகள் 4 பேருக்கு பரிசு வழங்கினார்.

முகாமில் கால்நடை ஆய்வாளர் ஜானகி, மருத்துவ உதவியாளர்கள் மரியஉபகாரம், முருகேசன் உள்ளிட்ட மருத்துவக் குழுவினர் பங்கேற்று 350 பசுமாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி, கோமாரி நோய் தடுப்பூசி, குடற்புழு நீக்கம், ஆண்மை நீக்கம், செயற்கை கருவூட்டல், சினை பரிசோதனை மேற்கொண்டனர். இதில் சிறந்த கலப்பின கிடாரிகள் வளர்த்த விவசாயிகள் 4 பேருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

## தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம்: விண்ணப்பிக்க இன்று கடைசி

விவசாயிகள் தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தில் இணைந்து பயன்பெற வேண்டுமென தோட்டக்கலைத்துறையினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதுகுறித்து தோட்டக்கலை துணை இயக்குநர் பொ.மணிமொழி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

புயல், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை சீற்ற பாதிப்புகளின்போதும், பூச்சி மற்றும் நோயினால் பயிருக்கு சேதம் ஏற்படும்போதும், விவசாயிகளுக்கு காப்பீடு மற்றும் நிதி உதவி அளிக்கும் திட்டமாக தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் உள்ளது.

இதன்படி கடலூர் மாவட்டத்தில் வாழை, மரவள்ளி, மஞ்சள் சாகுபடி செய்துள்ள விவசாயிகள், தங்களது பயிர்களுக்கு காப்பீடு செய்து இயற்கை இடர்பாடு காலங்களில் ஏற்படும் மகசூல் பாதிப்புக்கு நிவாரணம் பெறலாம்.

இதில், வாழைப்பயிர் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் ஏக்கருக்கு அதிகபட்சமாக ரூ.3.22 லட்சத்துக்கு காப்பீடு செய்யலாம். இதில், 50 சதவீத மானியத்தை அரசு செலுத்தும். மீதமுள்ள 50 சதவீத தொகையை (ரூ.12,085) தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகளில், பயிர்செய்த வருவாய் ஆவணங்களுடன் விவசாயிகள் செலுத்தலாம்.

அதேபோல் மரவள்ளி பயிரிட்டுள்ள விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.75,640க்கு காப்பீடு செய்யலாம். இதில், அரசு செலுத்தும் 50 சதவீதம் மானியம் போக மீதமுள்ள தொகையை (ரூ.1,891) பிரீமியமாக வங்கியில் செலுத்தலாம்.

மஞ்சள் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் ஏக்கருக்கு அதிகபட்சமாக ரூ.1.52 லட்சத்துக்கு காப்பீடு செய்யலாம். இதில், 50 சதவீத அரசு மானியம் போக எஞ்சிய தொகையை (ரூ.7,641) பிரீமியமாக செலுத்த வேண்டும்.

நடப்பு ஆண்டில் பயிர் அறுவடை பரிசோதனை மகசூல் மற்றும் 5 ஆண்டுகளுக்கான சராசரி மகசூல் ஆகியவற்றை கணக்கில் கொண்டு மகசூல் இழப்பீட்டின் போது இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும்.

எனவே, ஆர்வமுள்ள விவசாயிகள் செவ்வாய்க்கிழமைக்குள் (செப்.15) சம்பந்தப்பட்ட தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் அல்லது கூட்டுறவு வங்கிகளில் காப்பீடு செய்து பயனடையலாம் என்று அதில் தெரிவித்துள்ளார்.

## திருமூர்த்தி அணையிலிருந்து 4-ஆவது மண்டல பாசனத்துக்கு அக்.12-இல் தண்ணீர் திறப்பு

திருமூர்த்தி அணையில் இருந்து நான்காவது மண்டல பாசனத்திற்கு அக்டோபர் 12 ஆம் தேதி தண்ணீர் திறக்கப்படவுள்ளது.

பி.ஏ.பி. பாசனத் திட்டத்தில் திருமூர்த்தி அணை மூலமாக 3.77 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. அணையில் நீர் இருப்பை பொறுத்து, நான்கு மண்டலங்களுக்கு பல சுற்றுக்களாகப் பிரித்து தண்ணீர் வழங்கப்படுகிறது.

மூன்றாவது மண்டல பாசனத்திற்காக திறக்கப்பட்ட தண்ணீர் கடந்த ஏப்ரல் மாதம் நிறுத்தப்பட்டது. நான்காவது மண்டல பாசனத்துக்கு கடந்த ஆகஸ்ட் மாதம் முதல் சுற்று தண்ணீர் வழங்கியிருக்க வேண்டும். ஆனால், பருவமழை பொய்த்து போனதாலும், காண்டூர் கால்வாய் பணிகள் நடைபெற்று வருவதாலும் தண்ணீர் திறப்பதில் தாமதம் ஏற்பட்டது.

இந்நிலையில், வரும் 24-ஆம் தேதிக்கு முன்பாக காண்டூர் கால்வாய் பணிகள் நிறுத்தப்பட்டு, 24-ஆம் தேதி காண்டூர் கால்வாய் மூலம் திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் கொண்டு செல்லப்பட உள்ளது. அக்டோபர் 12ஆம் தேதி திருமூர்த்தி அணையில் இருந்து நான்காவது மண்டலத்துக்கு தண்ணீர் திறக்கப்படவுள்ளது.

நான்காவது மண்டல பாசனத்துக்கு இந்த முறை, இரண்டு சுற்றுத் தண்ணீர் மட்டுமே வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இதற்கான ஆலோசனைக் கூட்டம் திங்கள்கிழமை பி.ஏ.பி., அலுவலகத்தில் நடைபெற்றது. இதில், பி.ஏ.பி. திட்டக் குழுத் தலைவர் மெடிக்கல் பரமசிவம், உறுப்பினர்கள், கண்காணிப்பு பொறியாளர் இளங்கோவன் உள்பட பொதுப்பணித்துறை அதிகாரிகள் பலரும் பங்கேற்றனர்.

**வேளான் பல்கலை.யில் நாளை தேசியக் கருத்தரங்கம்**

சுற்றுச்சூழல் பிரச்னைகள் மற்றும் ஆற்றல் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக (எக்கோபெஸ்ட்-15) என்ற தேசியக் கருத்தரங்கம் புதன்கிழமை (செப்டம்பர் 16) நடைபெறவுள்ளது. இதில், வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல் மாணவர்கள் பங்கேற்கின்றனர். இதுதொடர்பான கூடுதல் விவரங்களுக்கு அமைப்புச் செயலர் டி.விஷ்ணுராம், 99652-22655 என்ற செல்லிடப்பேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

### மேட்டூர் அணையின் நீர்வரத்து குறைந்தது

மேட்டூர் : மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 2,147 கனஅடியாகவும், அணையின் நீர்மட்டம் 76.78 அடியாகவும், நீர் இருப்பு 38.82 டி.எம்.சி.,யாகவும் உள்ளது. மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக வினாடிக்கு 15 ஆயிரம் கனஅடி நீரும், அணையிலிருந்து

கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்திற்காக 700 கனஅடி நீரும் திறக்கப்பட்டது.

## மாவட்டத்தில் 1,500 ஏக்கரில் வெற்றிலை பயிர் பாதிப்பு: ஆய்வு மையம் அமைக்க விவசாயிகள் கோரிக்கை

கரூர்: பாசனத்தில் கழிவு நீரால், கரூர் மாவட்டத்தில், 1,500 ஏக்கரில் வெற்றிலைப் பயிரில் நோய் தாக்குதல் ஏற்பட்டு விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த பிரச்னையைத் தீர்க்க, வெற்றிலை நோய் தடுப்பு ஆய்வு மையம் அமைக்க கோரியுள்ளனர்.

கரூர் மாவட்டத்தில், காவிரி, அமராவதி ஆறுகளின் நீரில், 24 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறுகிறது. குறிப்பாக மாயனூர் காவிரி தடுப்பணை மூலம் லாலாபேட்டை, கிருஷ்ணராயபுரம், சிந்தலவாடி, குளித்தலை ஆகிய பகுதிகளும், ஈரோடு மாவட்டம், காரணம்பாளையம் புகளூர் பாசன வாய்கால் பாசனம் மூலம் புகளூர் மற்றும் வேலாயுதம்பாளையம் சுற்று வட்டாரத்தில் வெற்றிலை சாகுபடி நடந்து வருகிறது. கரூர் மாவட்டத்தில், 5,000 ஏக்கரில் கற்பூர வெற்றிலை, பச்சைக்கொடி, இளங்காள் சக்கை, முதுகால் சக்கை, இளங்கால் கற்பூரம், பூங்கொடி, இளங்கால் பச்சைக்கொடி என, பல வெற்றிலை ரகங்கள் பயிரிடப்படுகின்றன. இவற்றுக்கு உள்ளூர் மட்டுமல்லாமல், கோவை, ஈரோடு, திருப்பூர், திருச்சி உள்ளிட்ட மாவட்டங்களிலும், ராஜஸ்தான், குஜராத், மும்பை என, வெளிமாநிலங்களிலும் வரவேற்பு உள்ளது. கடந்த, 30 ஆண்டுகளுக்கு முன் வெற்றிலை சாகுபடி பரப்பு, பல ஆயிரம் ஏக்கர்களாக இருந்தது. சாயக்கழிவு நீரால் பாதிப்பு, போதிய நீரின்மை போன்ற காரணங்களால், வெற்றிலை சாகுபடி பரப்பு வெகுவாக குறைந்து விட்டது. வெற்றிலை உற்பத்தி செய்ய, மாசில்லாத தண்ணீர் பாய்ச்ச வேண்டும். அப்போதுதான், வெற்றிலையில் நோய் பாதிப்பு

இன்றி, தரமான மகசூல் கிடைக்கும். காவிரி, புகளூர் வாய்க்கால் போன்றவற்றில் சாயக்கழிவு நீர் அதிகளவில் கலப்பதால் வெற்றிலை பயிரில் பல்வேறு நோய் தாக்கல் ஏற்படுகிறது. இது தொடர்பாக ஆய்வு செய்து நிவர்த்தி செய்ய, கரூரில் ஒரு வெற்றிலை ஆய்வு மையம் அமைக்க வேண்டும் என, வெற்றிலைக் கொடிக்கால் விவசாயிகள் கோரி வருகின்றனர்.

வெற்றிலை விவசாயிகள் சங்க செயலாளர் ராமசாமி கூறியதாவது: கரூர் மாவட்டத்தில் வெற்றிலையில் வாடல்நோய், செவட்டை, கல்லிப்பூச்சி தாக்குதல் உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்படுகின்றன. வெற்றிலை சிறுத்து சிறிய அளவாக பழுப்பு நிறத்தில் மாறிவிடுகிறது. இந்த வெற்றிலைக்கு சரியான விலை கிடைக்கவில்லை. இதனால் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். கற்பூர வெற்றிலை, 104 கொண்ட ஒரு கவுளி, 500 ரூபாய் முதல், 700 ரூபாய் வரையும், வெள்ளை வெற்றிலை, 1,000 ரூபாய் முதல், 1,200 ரூபாய் வரையும் விற்கப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு, 1,000 கவுளி முதல், 3,000 கவுளி வரை வெற்றிலைக் கிடைக்கும். ஆனால், நீர் மாசு பிரச்னையால் ஏக்கருக்கு, 500 கவுளியாக உற்பத்தி குறைந்து விட்டது. இந்த போகத்தில் நோய் தாக்குதலால், 1,500 ஏக்கரில் வெற்றிலைக் கொடி பாதிக்கப்பட்டுள்ளது. வாடல் நோய், செவட்டை, கல்லிப்பூச்சி உட்பட நோய் தாக்குதல்களில் இருந்து, வெற்றிலை பயிரை காப்பாற்ற, விவசாயிகளுக்கு ஆலோசனை தேவைப்படுகிறது. இது போன்ற ஆலோசனை வழங்கிய ஆராய்ச்சி மையம், 35 ஆண்டுக்கு முன், நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூரில் செயல்பட்டது. எவ்வித அறிவிப்பும் இல்லாமல் இந்த மையம் மூடப்பட்டு, திருச்சி கரும்பு ஆராய்ச்சி மையத்துடன் இணைக்கப்பட்டது. வெற்றிலை விவசாயிகள் நோய் தாக்குதல், மண் வளம் உள்ளிட்ட பிரச்சனைகள் குறித்து தொழில்நுட்ப ரீதியாக அறிய வேண்டும் என்றால், திருச்சி மாவட்டம், சிறுகமணியில் உள்ள வெற்றிலை மற்றும் கரும்பு ஆராய்ச்சி மையத்துக்கு

செல்ல வேண்டியுள்ளது. இது, விவசாயிகளுக்கு இயலாதாகியுள்ளது. கரூர் மாவட்டவெற்றிலை சாகுபடிக்கு உதவும் வகையில், கரூர் மாவட்டத்திலேயே வெற்றிலை சாகுபடி ஆலோசனை மையம் அமைக்க வேண்டும். இவ்வாறு, அவர் கூறினார்.

**நாட்டு வாழை சாகுபடிக்கு மாறும் விவசாயிகள்**

தேனி: தேனி மாவட்ட விவசாயிகள் திசு வாழையில் இருந்து நாட்டு வாழை சாகுபடிக்கு மாறி வருகின்றனர். மாவட்டத்தில் 15 ஆயிரம் எக்டேரில் திசு வாழை சாகுபடி நடந்து வருகிறது. திசு வாழைக்கு தொடக்கத்தில் அதிக வரவேற்பு இருந்தாலும், தற்போது கர்நாடகா, ஆந்திரா, மகாராஷ்டிரா மாநிலங் களிலும் திசு வாழை சாகுபடி அதிகரித் துள்ளதால், தேனி மாவட்டத்தில் மவுசு குறைய தொடங்கியுள்ளது. இதனால் தேனி மாவட்ட விவசாயிகள் திசு வாழையில் இருந்து மீண்டும் செவ்வாழை, நாளிப்பூவன், நேந்திரம் போன்ற நாட்டுரகங்களுக்கு மாறி விட்டனர். இந்த வகை சாகுபடி தற்போது அதிகரித்து வருகிறது. இந்த ரக வாழைக்கு உள்நாட்டில் அதிக விலையும் கிடைப்பதால், விற்பனை வசதியும் கிடைக்கும் என விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

**நிரந்தர பயிர்களில் இயற்கை சாகுபடி முறை : மூன்று வட்டாரங்களில் குழுக்கள் அமைப்பு**

தேனி: நிரந்தர பயிர்களில் இயற்கை சாகுபடி பயன்படுத்த தோட்டக்கலை துறையில் புதிய திட்டம் அறிமுகம் செய்துள்ளது. ரசாயன உரம், பூச்சி மருந்துகளை பயன்படுத்தி விளைவிக்கப்படும் காய்கறிகளில் அளவிற்கு அதிகமான நச்சு தன்மை உள்ளதாக கூறி விற்பனையில் சிக்கல் ஏற்பட்டு வருகிறது. இதனால் இயற்கை முறையில் காய்கறி, பழங்கள் சாகுபடி செய்யும் தொழில் நுட்பத்திற்கு வரவேற்பு அதிகரித்து வருகிறது.

இயற்கை முறையில் காய்கறி சாகுபடி முறையை அறிமுகம் செய்தால் மூன்று மாதங்களுக்கு மட்டுமே இம் முறையை விவசாயிகள்

பின்பற்றுகின்றனர். அடுத்த சாகுபடிக்கு விவசாயிகள் ரசாயன உரம் பூச்சி மருந்துகளை பயன்படுத்தி விடுகின்றனர். அரசு இயற்கை முறையில் சாகுபடி செய்வதை அதிகரிக்கும் நோக்கில் நிரந்தர பயிர்களில் இயற்கை சாகுபடியை தொழில் நுட்பங்களை பயன்படுத்துவதற்கு புதிய திட்டம் அறிமுகம் செய்துள்ளது. "பரம்பர கிருஷ்சி விகாஷ் யோசனா' எனும் திட்டத்தில் ரசாயன பூச்சி மருந்துகளை குறைத்து இயற்கை வேளாண்மை முறையில் உற்பத்தி செய்யும் திட்டம் தேனி உள்ளிட்ட சில மாவட்டங்களில் இந்த ஆண்டு அறிமுகம் செய்துள்ளனர்.

தோட்டக்கலை துணை இயக்குனர் ராஜன் கூறியதாவது:

மாவட்டத்தில் மா சாகுபடி செய்துள்ள பகுதிகளான பெரியகுளம், போடி, ஆண்டிபட்டி வட்டாரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஒரு வட்டாரத்திற்கு 50 ஏக்கரில் 50 விவசாயிகளை ஒருங்கிணைத்து குழு அமைக்கப்படுகிறது. இக் குழுவிற்கு இயற்கை வழி வேளாண்மை பயிற்சிகள், இடுபொருட்கள் வழங்கி இயற்கை வேளாண் சாகுபடியை பயன்படுத்த ஆலோசனை வழங்கப்படும். இத் திட்டம் மூன்று ஆண்டுகளுக்கு நடைமுறைப்படுத்தப்படும். இக்குழுவில் உள்ள விவசாயிகளில் முன்னோடி விவசாயி ஒருவரை தேர்வு செய்து அவருக்கு இயற்கை வழிசாகுபடி முறை தொழில் நுட்பங்களை கற்றுக்கொடுக்கப்படும். பின்னர் அவர் மூலம் மற்ற விவசாயிகளுக்கு தொழில் நுட்பங்கள் கொண்டு சேர்க்கப்படும். ஒரு குழுவிற்கு மூன்று ஆண்டுக்குள் ரூ.6 லட்சம் நிதி வழங்கப்படும். மூன்று குழுக்களுக்கு 150 ஏக்கருக்கு ரூ.18 லட்சம் மானியமாக வழங்கப்படும். இயற்கை சாகுபடி முறையில் உற்பத்தியில் தயாராகும் மாம்பழம் ருசி, தரம் அதிகரிக்கும். உற்பத்தி சீராக இருக்கும். நல்ல விலை கிடைக்கும். இயற்கை சாகுபடி முறையில் தயாரான மாம்பழத்திற்கு நல்ல வரவேற்பு விலையும் நிரந்தரமாக கிடைக்கும். மா சாகுபடி செய்துள்ள விவசாயிகள்

உறுப்பினர்களாக சேரலாம். அந்தந்த பகுதியில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குனரை தொடர்பு கொள்ளலாம், என்றார்.

**காண்டூர் கால்வாய் பணி செப்.24க்குள் முடிக்க முடிவு! 4ம் மண்டலத்திற்கு அக்.12ல் தண்ணீர் வழங்க திட்டம்**

பொள்ளாச்சி: 'பி.ஏ.பி., காண்டூர் கால்வாய் பணிகள், வரும் 24ம் தேதிக்குள் முடித்து, திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் எடுத்து இருப்பு வைக்கவும்; அக்., மாதம் 12ம் தேதி முதல் நான்காம் மண்டல பாசனத்திற்கு தண்ணீர் வழங்கவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மேற்கு தொடர்ச்சி மலைகளில் உருவாகி கடலுக்கு செல்லும் தண்ணீரை தேக்கி, மின் உற்பத்தி மற்றும் பாசனத்திற்கு பயன்படுத்தும் நோக்கில், பி.ஏ.பி., திட்டம் உருவாக்கப்பட்டது. தொகுப்பு அணைகளிலிருந்து பெறப்படும் தண்ணீரை பாசனத்திற்கே வழங்க உடுமலை அருகே திருமூர்த்தி அணை கட்டப்பட்டது. அணைக்கு மேற்கு தொடர்ச்சி மலைத்தொடரில், அமைந்துள்ள காட்டாறுகள், தொகுப்பு அணைகள் மூலம் காண்டூர் கால்வாய் வழியாகவும் நீர் வரத்து உள்ளது. அணையிலிருந்து கோவை, திருப்பூர் மாவட்டத்திற்குட்பட்ட, 3.77 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

இந்நிலையில், திருமூர்த்தி அணைக்கு காண்டூர் கால்வாயிலிருந்து திறக்கப்பட்ட தண்ணீர் கடந்த ஏப்., 26ம் தேதி நிறுத்தம் செய்யப்பட்டது. காண்டூர் கால்வாய் புதுப்பிக்கும் பணி தற்போது நடந்து வருகிறது. நான்காம் மண்டல பாசனத்திற்கு கடந்த மாதமே தண்ணீர் திறக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், பணிகள் தொடர்ந்து நடைபெற்றதால், தண்ணீர் திறக்கப்படவில்லை. இதனால், விவசாயிகள் கவலை அடைந்தனர். இந்நிலையில், நேற்று பி.ஏ.பி., விவசாயிகள்,

பொதுப்பணித்துறை அதிகாரிகளுடன் தண்ணீர் திறப்பு குறித்து கலந்தாலோசனை கூட்டம் நடந்தது.

பி.ஏ.பி., திட்ட கண்காணிப்பு பொறியாளர் இளங்கோவன் கூறுகையில்," பி.ஏ.பி., காண்டூர் கால்வாய் பணிகள் 24ம் தேதிக்குள் முடிக்கப்பட்டு, கால்வாயிலிருந்து தண்ணீர் எடுத்து, திருமூர்த்தி அணைக்கு இருப்பு வைக்க விவசாயிகள் கலந்தாலோசித்து முடிவு செய்யப்பட்டது. பின், திருமூர்த்தி அணையிலிருந்து நான்காம் மண்டல பாசனத்திற்கு தண்ணீர் அடுத்த மாதம் 12ம் தேதி திறக்கப்படும்," என்றார்.

## அரசு அலுவலகங்களில் சூரிய சக்தி பயன்பாடு ஸ்மாட் சிட்டி திட்ட கூட்டத்தில் ஆலோசனை

புதுச்சேரி: ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில், அரசு அலுவலங்களில், சூரிய சக்தி பயன்பாடு இருக்க வேண்டும் என, கருத்துக்கேட்பு கூட்டத்தில் பொதுமக்கள் ஆலோசனை வழங்கினர்.

புதுச்சேரியில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்திற்கு, உழர்கரை நகராட்சி தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டத்தில், என்ன வசதிகளை ஏற்படுத்தலாம் என, உழவர்கரை நகராட்சியில் உள்ள, தொகுதி மக்களின் கருத்துக்களை கேட்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

கதிர்காமம் தொகுதி மக்களின் கருத்துக் கேட்பு கூட்டம், நேற்று நகராட்சி அரங்கில் நடந்தது. ஆணையர் ரமேஷ் தலைமை தாங்கினார்.

கதிர்காமம் தொகுதியை சேர்ந்த 30 பேர் பங்கேற்று, ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில், இடம் பெற வேண்டிய வசதிகள் குறித்து, பல்வேறு கருத்துக்களை முன் வைத்தனர்.

கதிர்காமத்தில் உள்ள கனக்கன் ஏரியில், கழிவு நீர் கலப்பதை தடுத்து, மழைநீரை சேமிக்க வேண்டும். அனைத்து அரசு அலுவலங்களிலும், சூரிய சக்தியை பயன்படுத்தி, தங்களின் மின் தேவையை பூர்த்தி செய்து கொள்ள வேண்டும்.

திருமண நிலையங்களில் இருந்து வெளியேறும் கழிவுகளை, பயோ கேஸ்சாக மாற்றி, அவர்களே பயன்படுத்த வேண்டும். குற்றச் சம்பவங்களை தடுக்க முக்கிய சந்திப்புகளில், சி.சி.டி.வி.,கேமரா பொருத்த வேண்டும்.

சுற்றுச் சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத வகையில், கதிர்காமம் தொகுதியில் உள்ள சுடுகாடுகளை, மின்சாரம் அல்லது எல்.பி.ஜி.,யாக மாற்ற வேண்டும் என கூறினர்.

நாளை (16ம் தேதி) உழவர்கரை தொகுதி மக்களின், கருத்துக் கேட்பு கூட்டம் நடக்கிறது. இதில் பங்கேற்ற விரும்புவோர் மாலை 3 மணிக்குள் நகராட்சி அலுவலகத்தில் தங்களின் பெயர்களை பதிந்து கொள்ளலாம்.

தி இந்து

தமிழால் இணைவோம்

## தனியார் ஆலைகளிடம் ரூ.5,200 கோடி நிலுவையையும் மீறி உ.பி.யில் கரும்புக்கான புதிய அறவை பருவம் அறிவிப்பு

கரும்பு நிலுவைத் தொகை ரூ.5,200 கோடிக்கு மேல் தனியார் சர்க்கரை ஆலைகளால் கொடுக்கப்படாத நிலையில், உத்தரப் பிரதேச மாநில சமாஜ்வாதி கட்சி அரசு இன்று முதல் புதிய அறவை பருவத்தை அறிவித்து ஆலைகள் தயாரிப்புகளை மேற்கொள்ளக் கூறியுள்ளது.

நாட்டிலேயே மிக அதிகமாக சர்க்கரை உற்பத்தி செய்யப்படும் மாநிலம் உத்தரப் பிரதேசம். இங்கு, புதிய கரும்புப் பருவம் அக்டோபர் 1 அன்று தொடங்க, அறவைப் பருவம் நவம்பர் 15 அன்று தொடங்குகிறது. இங்குள்ள உள்ள 123 சர்க்கரை ஆலைகளில் பெரும்பாலனவை தனியார் ஆலைகளாகும். இவற்றுக்குத் தேவையான கரும்பு பகுதிகளை மாநில

கரும்பு வளர்ச்சித் துறை ஒதுக்கீடு செய்யத் தொடங்கியுள்ளது. ஆனால் தங்களது பிரச்சனைகளுக்கு அரசு தீர்வு காணாதவரை கூட்டத்தில் கலந்துகொள்வதில்லை என்று பெரும்பாலான தனியார் ஆலைகள் தெரிவித்துள்ளன.

இது குறித்து அம்மாநில மாநில கரும்பு ஆணையர் அஜய் குமார் சிங் அறிக்கையில், "மாநில அரசு இயன்ற அளவு நிவாரணம் வழங்கியுள்ளது. இனிமேல் தனியார் ஆலைகள் செயல்படத் தொடங்கவேண்டும். இதற்கானக் கூட்டங்களில் அவர்கள் கலந்து கொள்ளாவிட்டால், அரசு அவர்களுக்கானப் பகுதிகளை வேறு எவருக்கும் ஒதுக்கீடு செய்துவிடும்" எனத் தெரிவித்துள்ளார்.-

நிதிச் சிக்கலில் உள்ள தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு உ.பி. அரசு ரூ.2,000 கோடி நிதி அளித்துள்ளது. மத்திய அரசிடமிருந்தும் ரூ.1000 கோடி கிடைக்கும் என்று மாநில சர்க்கரைத் தொழில் அதிபர்கள் எதிர்பார்க்கின்றனர். இவ்வளவு நிவாரண உதவி கிடைத்தும் தங்களுக்கு நஷ்டம் ஏற்பட்டு
வருவதாகவும் தங்களால் மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலையான குவிண்டாலுக்கு ரூ.230 கொடுக்க முடியாது என்றும், தனியார் ஆலைகள் கூறுகின்றனர். 2014-15 அறவைப் பருவத்திற்கு உ.பி.அரசு மானில ஆதார விலையாக குவிண்டாலுக்கு ரூ.280 அறிவித்து ஆலைகள் ரூ 240ஐ உடனடியாகவும் ரூ 40ஐ பின்னரும் அளிக்கக் கூறியது.

மாலை மலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

## வறட்சி பாதித்த பகுதிகளில் 100 நாள் வேலை திட்டத்தில் கூடுதலாக 50 நாளுக்கு வேலை: மத்திய அரசு அறிவிப்பு



புதுடெல்லி, செப்.15-

மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் கீழ், கிராமப்புற வேலைவாய்ப்பு அட்டை வைத்திருப்போருக்கு ஆண்டுக்கு 100 நாட்கள் வேலை அளிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், நடப்பு நிதியாண்டில், ‘வறட்சி மற்றும் இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்டவை’ என அறிவிக்கப்பட்ட பகுதிகளில், 100 நாள் வேலையுடன், கூடுதலாக 50 நாட்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க மத்திய அரசு நேற்று முடிவு செய்தது.

மத்திய வேளாண் அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. பருவமழை பற்றாக்குறை காரணமாக,

இம்முடிவை மத்திய அரசு எடுத்துள்ளது.மாநில அரசுகளுடன் ஆலோசனை நடத்தி, 'வறட்சி பாதித்த பகுதிகள்' அறிவிக்கப்படும் என்று மத்திய கிராமப்புற மேம்பாட்டுத்துறை செயலாளர் மொகாபத்ரா கூறினார்.

## 2-வது சீசனுக்கு தயாராகும் ஊட்டி தாவரவியல் பூங்கா: பூத்து குலுங்கும் பல வண்ண மலர்கள்



ஊட்டி, செப். 15–

நீலகிரி மாவட்டம் ஊட்டியில் கடந்த சில தினங்களாக மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக 2–வது சீசனுக்கு ஊட்டி தயாராகி வருகிறது. நல்ல சீதோஷ்ண நிலை நிலவுவதால் அடுத்த 2 மாதங்களுக்கு சுற்றுலா துறையில் நல்ல வருவாய் இருக்கும் என்று ஊட்டி சுற்றுலாத்துறையினர் தெரிவித்து உள்ளனர்.

வழக்கமாக ஆண்டுதோறும் செப்டம்பர் மாதம் நடுவில் 2–வது சீசன் தொடங்கும். கோடை சீசன் முடிந்து 3 மாத இடைவெளிக்கு பின்னர் தொடங்கும் சீசன் என்பதால் சுற்றுலா பயணிகள் ஆர்வத்துடன் கலந்து கொள்வார்கள். கோடை காலத்தில் நிலவும் சீசனை விட செப்டம்பர் மாதம் தொடங்கும் சீசன் வித்தியாசமாக இருக்கும். இந்த சீசனின் போது மழை, பனி, மேகமூட்டம் உள்ளிட்ட சீதோஷ்ண நிலைகள் மாறி மாறி

நிலவும். ஜூன் மற்றும் ஆகஸ்டு மாதங்களில் ஒரே காலநிலை நிலவும் சூழ்நிலையில் செப்டம்பர் மாத சீசனில் வித்தியாசமான காலநிலையை அனுபவிக்க சுற்றுலா பயணிகள் அதிகம் விரும்புவார்கள்.

இந்த காலநிலையில் பூக்கள் பனித்துளியுடன் காணப்படும். இதன் அழகு காண்போரை மெய் மறக்க செய்யும். இந்த காலகட்டத்தில் தங்கும் விடுதிகள் மற்றும் சந்தைகளில் விற்பனை நன்றாக இருக்கும். இந்த ஆண்டு 2–வது சீசன் வருகிற 18–ந்தேதி தொடங்குகிறது. இதற்காக பூந்தொட்டிகளில் பூத்து குலுங்கும் பலவண்ண மலர்கள் மலர்மாடங்களில் அடுக்கும் பணி நடந்து வருகிறது.

கடந்த கோடை சீசனில் ஊட்டி தாவரவியல் பூங்காவை சுமார் 3.50 லட்சம் சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்து உள்ளனர். இந்த 2–வது சீசனிலும் அதிக அளவிலான சுற்றுலா பயணிகள் வருவார்கள் என தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் எதிர்பார்க்கிறார்கள்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## வறட்சி பாதித்த பகுதிகளில் 100 நாள் வேலை திட்டத்தில் கூடுதலாக 50 நாளுக்கு வேலை மத்திய அரசு அறிவிப்பு

सत्यमेव जयते

Government of India

புதுடெல்லி,

மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் கீழ், கிராமப்புற வேலைவாய்ப்பு அட்டை வைத்திருப்போருக்கு ஆண்டுக்கு 100 நாட்கள் வேலை அளிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், நடப்பு நிதியாண்டில், 'வறட்சி மற்றும் இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்டவை' என அறிவிக்கப்பட்ட பகுதிகளில், 100 நாள் வேலையுடன், கூடுதலாக 50 நாட்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க மத்திய அரசு நேற்று முடிவு செய்தது.

மத்திய வேளாண் அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. பருவமழை பற்றாக்குறை காரணமாக, இம்முடிவை மத்திய அரசு எடுத்துள்ளது.

மாநில அரசுகளுடன் ஆலோசனை நடத்தி, 'வறட்சி பாதித்த பகுதிகள்' அறிவிக்கப்படும் என்று மத்திய கிராமப்புற மேம்பாட்டுத்துறை செயலாளர் மொகாபத்ரா கூறினார்.

## கடல்நீரை குடிநீராக்கும் புதிய தொழில்நுட்ப ஆராய்ச்சி மாணவிக்கு ரூ.16 லட்சம் பரிசு



காட்பாடி,

இங்கிலாந்தில் நடந்த புதிய ஆராய்ச்சி போட்டியில் கடல்நீரை குடிநீராக்கும் புதிய தொழில்நுட்பத்தை கண்டுபிடித்த வேலூர் மாணவிக்கு 2-வது பரிசான ரூ.16 லட்சம் கிடைத்தது.

ஆராய்ச்சி போட்டி

இங்கிலாந்து நாட்டின் ஆம்ஸ்டர்டாம் நகரை தலைமை இடமாக கொண்டு 'ஆர்எல்இஎக்ஸ் குரூப்' நிறுவனம் இயங்கி வருகிறது. அந்த நிறுவனம் பெருகி வரும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையிலும், சுகாதாரம் ஆகியவற்றிற்கு தீர்வு காணும் வகையிலும் புதிய தொழில்நுட்ப கண்டுபிடிப்பு ஆராய்ச்சிக்கான 2015 குரூப் என்விரோமெண்டல் என்ற போட்டியை அறிவித்திருந்தது.

இந்த போட்டி உலக சுகாதார நிறுவனம் மற்றும் யுனிசெப் ஆகிய நிறுவனங்களின் கண்காணிப்பில் நடந்தது. இதில் வேலூர் வி.ஐ.டி. பல்கலைக்கழகத்தின் பி.எச்.டி., ஆராய்ச்சி மாணவியான டெவிலினாதாஸ் உள்பட பல்வேறு நாடுகளில் உள்ள பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.வி.ஐ.டி. மாணவிக்கு ரூ.16 லட்சம் பரிசுஇதில் வி.ஐ.டி. பல்கலைக்கழகத்தின் மாணவி டெவிலினாதாஸ் சூரிய ஒளி சக்தியை பயன்படுத்தி கடல் நீரை குடிநீராக்கி, அதனை வீடுகளுக்கு நேரடியாக குழாய் மூலம் வினியோகம் செய்வதற்கான 'சலினோ' என்கிற புதிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு வெற்றி பெற்றார்.

இந்த புதிய கண்டுபிடிப்பில் சூரிய ஒளி சக்திக்காக பயன்படுத்தப்படும் பேனல் உள்ளிட்ட கருவிகள் எளிதாக பயன்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாக போட்டியை நடத்தும் குழுவினர் இந்த சலினோ ஆராய்ச்சியை 2-வது இடத்திற்கு தேர்வு செய்து அதற்கு பரிசு தொகையான 25 ஆயிரம் அமெரிக்க டாலர் வழங்கி பாராட்டியுள்ளது. இது இந்திய ரூபாய் மதிப்பில் ரூ.16 லட்சம் ஆகும்.

இங்கிலாந்தில் நடந்த போட்டியில் ரூ.16 லட்சம் பரிசு பெற்ற மாணவி டெவிலினாதாசை வி.ஐ.டி. வேந்தர் ஜி.விசுவநாதன் பாராட்டி வாழ்த்து தெரிவித்தார்.

## அந்தியூர் வரட்டுப்பள்ளம் அணையில் மீன்பிடி தடைகாலம் அறிவிப்பு



அந்தியூர்,

அந்தியூர் வரட்டுப்பள்ளம் அணையில் மீன்பிடி தடைகாலம் அறிவிக்கப்பட்டது.

<u>மீன்பிடி தடைகாலம்</u>

பர்கூர் மேற்கு மலை தொடர்ச்சியில், 2 மலைகளுக்கு இடையே அமைந்துள்ளது அந்தியூர் வரட்டுப்பள்ளம் அணை. இங்கு பர்கூர் மலைப்பகுதியில் பெய்யும் மழைநீர் மூலம் தண்ணீர் வருகிறது. அணையில் இருந்து பாசனத்துக்கும், ஏரிகளுக்கும் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

மேலும் அணையில் மீன்வளத்துறையின் மூலம் ஆண்டுதோறும் 60 நாட்களுக்கு மீன்குஞ்சுகள் விடப்பட்டு வளர்க்கப்படும். அதன்படி நேற்று வரட்டுப்பள்ளம் அணையில் மீன்குஞ்சுகள் விடப்பட்டன. இதையடுத்து மீன்கள் நன்கு வளர்வதற்காக மீன்வளத்துறையினர் அணையில் 60 நாட்கள் மீன்பிடி தடைகாலமாக அறிவித்தனர்.

*__மீன்கள் விடப்பட்டன__*

இதுகுறித்து மீன்வளத்துறை அதிகாரிகள் கூறும்போது, ‘வரட்டுப்பள்ளம் அணையில் ஆண்டுதோறும் செப்டம்பர் மாதம் மீன்குஞ்சுகள் விடப்பட்டு வளர்க்கப்பட்டு வருகின்றன. அதன்படி தற்போது பவானிசாகர் மற்றும் மேட்டூர் மீன் பண்ணைகளில் இருந்து கட்லா, ரோகு, ஜிலேபி ரக மீன் குஞ்சுகள் பிடிக்கப்பட்டு வரட்டுப்பள்ளம் அணையில் விடப்பட்டுள்ளது. மொத்தம் 1 லட்சத்து 10 மீன்களை விட்டுள்ளோம். இந்த மீன்கள் நன்கு வளர்வதற்காக 60 நாட்கள் மீன்பிடி தடைகாலமாக அறிவித்துள்ளோம். மீன்கள் நன்கு வளர்ந்தது உறுதி செய்த பின் அவைகள் பிடிக்கப்படும். பர்கூர் மலைப்பகுதியில் இருந்து வரட்டுப்பள்ளம் அணைக்கு வரும் மழைநீரில் வனவிலங்குகளின் கழிவுகள் அரித்து வரப்படுகிறது. வனவிலங்குகளின் கழிவுகளை மீன்கள் உண்பதால் அவைகள் வேகமாக வளருகின்றன. குறைந்த விலைக்கு மீன்கள் விற்கப்படுவதால் வரட்டுப்பள்ளம் அணைக்கு ஈரோடு, பவானி, கோபி, கவுந்தப்பாடி உட்பட பல்வேறு இடங்களில் இருந்து வந்து பொதுமக்கள் மீன்கள் வாங்கி செல்கிறார்கள்‘ என்றனர்.

## உரம் தட்டுப்பாடின்றி கிடைக்க நடவடிக்கை விவசாய இடுபொருள் வியாபாரிகள் சங்க கூட்டத்தில் தீர்மானம்




சம்பா பருவத்திற்கு தட்டுப்பாடின்றி உரம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாய இடுபொருள் வியாபாரிகள் சங்க கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பொதுக்குழு கூட்டம்

மயிலாடுதுறையில் நாகை மாவட்ட விவசாய இடுபொருள் வியாபாரிகள் சங்க பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட தலைவர் ரவிச்சந்திரன் தலைமை தாங்கினார். செயலாளர் தண்டபாணி, பொருளாளர் ராமகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தட்டுப்பாடின்றி உரம்

கூட்டத்தில், நாகை மாவட்டத்தில் சம்பா பருவத்திற்கு தேவையான உரம் தட்டுப்பாடின்றி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேளாண்மை இணை இயக்குனரை கேட்டுக் கொள்வது. ஜிப்சம் உரத்திற்கான வாட் வரி 5 சதவீதம் விதிக்கப்பட்டிருப்பதற்கு விலக்கு அளிக்க அரசை கேட்டுக் கொள்வது. நாகை மாவட்டத்திற்கு தேவையான

உரங்கள் தஞ்சை, கும்பகோணம், திருச்சி ரெயில் நிலையங்களில் இறக்கி அங்கிருந்து லாரிகள் மூலம் எடுத்துவர கூடுதல் செலவு ஆவதால் மயிலாடுதுறை ரெயில் நிலையத்திற்கு நேரடியாக இறக்குமதி செய்ய அதிகாரிகளை கேட்டுக் கொள்வது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முடிவில் இணை செயலாளர் கனகசபை நன்றி கூறினார்.

## மன்னகுடி பகுதியில் மரவள்ளிக் கிழங்கு அறுவடை பணி தீவிரம்



அறந்தாங்கியை அடுத்த மன்னகுடி பகுதியில் மரவள்ளிக்கிழங்கு அறுவடை பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

மானாவாரி சாகுபடி

காவிரிப்பாசன பகுதியில் நிலவும் தண்ணீர் பற்றாக்குறையை அடுத்து அப்பகுதி விவசாயிகள் மானாவாரி சாகுபடி பயிர்களை சாகுபடி செய்ய தொடங்கியுள்ளனர்.

இதேப்போல அறந்தாங்கி ஒன்றியம் மன்னகுடி பகுதியில் சில விவசாயிகள் தங்கள் வயல்களில் மரவள்ளிக்கிழங்கு சாகுபடி செய்துள்ளனர். கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் சாகுபடியை தொடங்கிய விவசாயிகள், தற்போது தேவைக்கு ஏற்ப மரவள்ளிக்கிழங்கை அறுவடை செய்து வருகின்றனர்.

மன்னகுடி பகுதி விவசாயிகள் தாங்கள் சாகுபடி செய்துள்ள மரவள்ளிக்கிழங்குகளை மண்ணிலிருந்து எடுத்து, சுத்தம் செய்து,

சுப்பிரமணியபுரம், அரசர்குளம், நாகுடி, அறந்தாங்கி போன்ற பகுதிகளில் விற்பனை செய்து வருகின்றனர். ஒரு கிலோ கிழங்கு ரூ.20 முதல் 30 வரை விற்பனை செய்து வருகின்றனர்.

ரூ.30 ஆயிரம் வரை...

இதுகுறித்து மரவள்ளிக்கிழங்கு சாகுபடி செய்துள்ள விவசாயியான மன்னகுடியைச் சேர்ந்த மனோகரன் தினத்தந்தி நிருபரிடம் கூறியதாவது:-

தண்ணீர் பற்றாக்குறையை சமாளிக்க மரவள்ளிக்கிழங்கு சாகுபடி செய்துள்ளோம். கடந்த அக்டோபரில் சாகுபடி செய்து தற்போது அறுவடை செய்து வருகிறோம். மாதத்திற்கு இரண்டு முறை தண்ணீர் விட்டும், தேவைக்கு ஏற்ப ரசாயன உரங்கள் இட்டும் சாகுபடி செய்து வருகிறோம். ஏக்கருக்கு எல்லா செலவும் போக ரூ.30 ஆயிரம் வரை லாபம் கிடைக்க வாய்ப்புள்ளது. தற்போது உள்ளூரையே நம்பி வியாபாரம் செய்வதால் விலை குறைவாக கிடைக்கிறது. வெளியூர் வியாபாரிகள் வந்தால் விலை கூடுதலாக கிடைக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

ஒரு காலத்தில் வெளியூர்களில் இருந்து வாங்கி வந்து சாப்பிட்டு வந்த மரவள்ளிக்கிழங்கு தற்போது உள்ளூரிலேயே சாகுபடி செய்யப்பட்டு, புதிதாக கிடைப்பதால் பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர்.


**மேட்டூர் அணையின் நீர்மட்டம் சரிவு**




மேட்டூர்: காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் மழை குறைந்ததால் மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் விநாடிக்கு 2,807 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று காலை 8 மணி நிலவரப்படி விநாடிக்கு 2,436 கனஅடியாக சரிந்தது. அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனம் மற்றும் கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்திற்காக விநாடிக்கு 15,700 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. நீர் வரத்தைவிட, திறப்பு அதிகளவில் உள்ளதால் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து சரிந்து

வருகிறது. நேற்று முன்தினம் 79.21 அடியாக இருந்த நீர்மட்டம் நேற்று 78.02 அடியாக சரிந்தது. நீர் இருப்பு 40.01 டிஎம்சி.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் சரிவு**



புனே: வெங்காயத்தை தொடர்ந்து பருப்பு விலை கடுமையாக உயர்ந்து வருகிறது. இந்நிலையில் உள்ளூர் தேவைக்காக பருப்பு இறக்குமதிக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. தவிர, இறக்குமதியாளர்களும் பருப்பு வகை இறக்குமதிக்கு பல்வேறு நாடுகளுடன் ஒப்பந்தம் செய்துள்ளனர். இவை அக்டோபர் முதல் அடுத்த ஆண்டு ஜனவரிக்குள் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் கடந்த 10 முதல் 15 நாட்களில் மகாராஷ்டிர மாநிலம் லத்தூரில் உள்ள மொத்த விலை சந்தையில் உளுந்து கிலோ ரூ.94ல் இருந்து ரூ.84 ஆகவும், பாசிப்பயறு கிலோ ரூ.82ல் இருந்து ரூ.76

ஆகவும், துவரம் பயறு கிலோ ரூ.108ல் இருந்து ரூ.99 ஆகவும் சரிந்துள்ளது. ரகத்துக்கு ஏற்ப பிற பகுதிகளில் இந்த விலை மாறுபடும்.

**ஆயுர்வேத, ஊட்டச்சத்து தயாரிப்பை மருந்து என விற்பனை செய்ய தடை: உணவு பாதுகாப்பு ஆணையம் திட்டம்**



புதுடெல்லி: ஆயுர்வேத தயாரிப்புகள் பல மருந்து என்ற பெயரில் மருந்துக்கடைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. இதுபோல் ஊட்டச்சத்து தயாரிப்புகள், பானங்கள் ஆகியவையும் மருந்து கடைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. இந்நிலையில் இது குறித்த வரையறைகளை இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் (எப்எஸ்எஸ்ஏஐ) வகுத்துள்ளது. இதன்படி இந்த

தயாரிப்புகளை மருந்து பெயரில் விற்க தடை வருகிறது. அதாவது ஊட்டச்சத்து தொடர்பான தயாரிப்புகள் மீது ‘உணவு’ அல்லது ‘ஊட்டச்சத்து’ என்ற லேபிள் கண்டிப்பாக இடம்பெற வேண்டும்.‘மருந்து உபயோகத்துக்காக அல்ல’ என்ற வாசகமும் லேபிளின் மீது பிரதானமாக பொறிக்கப்பட்டிருக்க வேண்டும். என்று எப்எஸ்எஸ்ஏஐ இந்த தெரிவித்துள்ளது.

யுனானி, சித்தா, ஆயுர்வேத மருந்துகள் மற்றும் இந்த முறையில் பாரம்பரியமாக தயாரிக்கப்படுபவை எப்எஸ்எஸ்ஏஐ விதிகளுக்கு புறம்பாக இருக்கும் பட்சத்தில் அவை மருந்து என்ற பெயரில் விற்கப்பட கூடாது. ‘சிகிச்சை அல்லது நோயை தீர்க்கக்கூடியது’ என்ற வாசகங்களும் இடம்பெறக்கூடாது. பால், எருமைப்பால், ஒட்டகப்பால், நெய், தயிர், வெண்ணெய், தேன், தங்கம், வெள்ளி, முத்து ஆயுர்வேதம், சித்தா, யுனானி தயாரிப்புகளில் இடம்பெறுகின்றன. இவை அதிகபட்சமாக எந்த அளவு பயன்படுத்தப்பட வேண்டும் என்பதற்கும் எப்எஸ்எஸ்ஏஐ வரையறை செய்கிறது.

இவற்றின் பயன்கள் அறிவியல்பூர்வமாக நிரூபிக்கப்பட வேண்டும் என்று எப்எஸ்எஸ்ஏஐ தெரிவித்துள்ளது. இந்த வரையறைகள் மீது ஆட்சேபம் மற்றும் கருத்துக்களை பரிசீலனை செய்த பிறகு உரிய தடை உத்தரவு பிறக்கப்பட உள்ளது. சந்தையில் விற்கப்படும் ஊட்டச்சத்து பொருட்களில் சுமார் 60 முதல் 70 சதவீதம் போலியான அல்லது பதிவு, உரிமம் பெறாதவையாக உள்ளன. இவை திரும்பப்பெறப்பட வேண்டும் என இந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

**யூரியா இறக்குமதி 43 சதவீதம் அதிகரிப்பு**



புதுடெல்லி: நடப்பு ஆண்டின் முதல் 5 மாதங்களில் 3.06 மில்லியன் டன் யூரியா இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. கடந்த நிதியாண்டின் இதே காலக்கட்டத்தில் இது 2.13 மில்லியன் டன்னாக இருந்தது. இத்துடன் ஒப்பிடுகையில் இறக்குமதி 43 சதவீதம் அதிகரித்துள்ளது. நாட்டின் யூரியா தேவை ஆண்டுக்கு 30 மில்லியன் டன்களாக உள்ளது. ஆனால் இங்கு 22 மில்லியன் டன் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த பற்றாக்குறையை ஈடுகட்ட மத்திய அரசு வேளாண் உபயோகத்துக்காக யூரியாவை இறக்குமதி செய்கிறது. இதன் அதிகபட்ச சில்லரை விற்பனை விலை டன்னுக்கு ரூ. 5,360ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய இழப்பை உர உற்பத்தியாளர்களுக்கு அரசு மானியமாக வழங்குகிறது.

**வெங்காயம், பருப்பு விலை உயர்ந்தபோதும்: ஆகஸ்ட்டில் பணவீக்கம் சரிவு**



புதுடெல்லி: ஆகஸ்ட் மாதத்தில் சில்லரை, மொத்த விலை பண வீக்கம் சரிந்துள்ளது. கடந்த ஆகஸ்ட் மாதத்தில் சில்லரை விலை பண வீக்கம் 3.66% ஆக சரிந்தது. இது ஜூலையில் 3.69% ஆக இருந்தது. ஆனால், உணவு பொருட்கள் பண வீக்கம் வெங்காயம் மற்றும் பருப்பு விலை உயர்வு காரணமாக 2.2% ஆக உயர்ந்துள்ளது. காய்கறிகள் விலை 6.36%ஆக குறைந்துள்ளது. பழங்கள் விலையும் சரிந்துள்ளது. புரதம் நிறைந்த உணவு பொருட்கள் பண வீக்கம் 25.76%ஆக உயர்ந்துள்ளது. இருப்பினும், இறைச்சி, மீன், பால் பொருட்கள் விலை சற்று குறைந்துள்ளது.

இதுபோல், மொத்தவிலை பண வீக்கம் -4.95 சதவீதமாக சரிந்துள்ளது. இருப்பினும் வெங்காயம், பருப்பு வகைகளை பொறுத்தவரை இது முறையே 65.29 மற்றும் 36.40%ஆக அதிகரித்துள்ளது. மற்றபடி காய்கறிகள் -21.21 சதவீதம், உருளைக்கிழங்கு -51.71 சதவீதமாக உள்ளது. முட்டை, இறைச்சி, மீன் ஆகியவை 3.3%, பால் 2.08%, கோதுமை 2.05% என சரிந்துள்ளன.

**புகையான் பூச்சியிடமிருந்து நெல்லை பாதுகாப்பது எப்படி? வேளாண்துறையினர் ஆலோசனை**

காரைக்குடி. : நெல்லில் புகையான் பூச்சி (தத்துப்பூச்சி) தாக்குதலைக் கட்டுப்படுத்தும் முறை குறித்து வேளாண்துறையினர் ஆலோசனை வழங்கியுள்ளனர்.வேளாண்துறையினர் தெரிவித்துள்ளதாவது: புகையான் தாக்கப்பட்ட பயிர் முற்றிலும் காய்ந்து தீய்ந்தமாதிரி காட்சியளிக்கும், பயிர்கள் சாய்ந்து விடும், நீர்மட்டத்தின் மேலிருக்கும் பயிரின் அடிப்பகுதியில் இளம் குஞ்சுகள் மற்றும் முதிர் பூச்சிகள் ஒட்டிக்கொண்டு இருக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட தத்துப்பூச்சி காணப்பட்டால், அதை கட்டுப்படுத்த வயலில் நீர் முழுவதுமாக வடித்து விடவேண்டும். தூர்களின் அடிப்பகுதியில் சூரிய வெளிச்சம், காற்று படும்படி பிரித்து விட வேண்டும்.

வேப்ப எண்ணெய் ஹெக்டருக்கு 15 லிட்டர் அல்லது இலுப்பை எண்ணெய் ஹெக்டருக்கு 30 லிட்டர் அல்லது வேப்பங்கொட்டைச்சாறு ஹெக்டருக்கு 25 கிலோ பயன்படுத்த வேண்டும். புகையானை கட்டுப்படுத்த இமிடாகுளோபிரிட் 17.8 எஸ்எல் ஹெக்டருக்கு 100:125 மில்லி அல்லது பைப்ரோனில் 5 சதவீதம் எஸ்சி ஹெக்டருக்கு 1000 மில்லி அல்லது பியூபரோபெசின் 25 சதவீதம் எஸ்சி ஹெக்டருக்கு 800 மில்லி அல்லது புரொபனபாஸ் ஹெக்டருக்கு 1000 மில்லி இவற்றில் ஏதேனும் ஒன்றை தெளிக்க வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

**குண்டு மிளகாய் விதை பிரிக்கும் பணியில் விவசாயிகள் தீவிரம்**

இளையான்குடி, : சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில், காய்ந்த வற்றல் மிளகாயிலிருந்து விதைகளை தனியாக பிரிக்கும் பணியில் அப்பகுதி விவசாயிகள் தீவிரம் காட்டிவருகின்றனர். சிவகங்கை மாவட்டம் இளையான்குடி தாலுகாவிற்கு உட்பட்ட இளையான்குடி, சாலைக்கிராமம், சூராணம், தாயமங்கலம், திருவுடையார்புரம் ஆகிய

வருவாய் பிர்காக்களில் கடந்த ஆண்டு சுமார் 3 ஆயிரம் ஹெக்டேரிலும், இராமநாதபுரம் மாவட்டம் ஆர்எஸ்.மங்கலம், நயினார்கோயில், முதுகுளத்துர், சாயல்குடி ஆகிய பகுதிகளில் 15 ஆயிரம் ஹெக்டேரில் ராம்நாடு முண்டு எனப்படும் குண்டு மிளகாய் அதிக அளவில் பயிரிடப்பட்டது.

கடந்த ஆண்டு ஜனவரி முதல் மார்ச் வரை ஒரு கிலோ மிளகாய் 50 முதல் 60 வரை விற்பனையானது. தற்போது ஒரு கிலோ மிளகாய் 70 முதல் 80 வரை விற்பனையாகிறது. புரட்டாசி மாதம் துவங்க இருப்பதால், பரவலான லேசான மழை, மிளகாய் விதைக்க ஏற்ற காலநிலை என்பதால், தற்போது சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் ஏற்கனவே விதைக்கு வைத்திருந்த வற்றல் மிளகாயை, உடைத்து விதைகளை தனியாக பிரித்து எடுக்கும் பணியில் மும்மரமாக ஈடுபட்டுள்ளனர்.
ஒரு ஏக்கருக்கு மூன்று படி அளவில் விதை மிளகாய் பிரித்து எடுக்கின்றனர்.

மேலும் சில இடங்களில் சரியான மழை இல்லாததால், பிரித்து எடுத்த விதையை தயார் நிலையில் வைத்துள்ளனர்.
இதுகுறித்து சிறுபாலையைச் சேர்ந்த விவசாயி பூமயில் கூறுகையில், “ மிளகாய் விதைப்பதற்கு லேசான மழை போதும். மாவட்டத்தில் சில இடங்களில் நல்ல மழையும், சில இடங்களில் மழையே பெய்யாமலும் உள்ளது. அதனால் மிளகாய் விதைகளை தயார் நிலையில் பிரித்து வைத்துள்ளோம்” என்றார்.

**விவசாயிகள் வாழ்க்கை தரம் உயர வெள்ளாடு வளர்ப்பில் கவனம் செலுத்தலாம்**

பழநி, : வெள்ளாடு வளர்ப்பதன் மூலமாக உபரி வருமானத்தை பெருக்கிக்கொண்டு வாழ்க்கை தரத்தை மேம்படுத்திக் கொள்ள வாய்ப்புள்ளது. வெள்ளாடு வளர்ப்பதில் முதலீடு மிகவும் குறைவு. எனவே தான் வெள்ளாடுகளை ஏழைகளின் பசு என்று அழைக்கின்றனர். வெள்ளாடுகள் மிகக்குறைந்த காலத்தில் 1012 மாதங்களில் பருவ வயதை அடைந்துவிடும். இவை 1617 மாதங்களில் குட்டிகளை ஈன்றெடுத்து விடும். வறண்ட நிலங்களில் மற்ற கால்நடைகளை விட ஆடு வளர்ப்பே சிறந்தது ஆகும். மேலும் தீவன பராமரிப்பு மிகவும் குறைவு. ஆட்டில் இருந்து கிடைக்கும் தோல், முடி ஆகியவையும் பதனிடும் தொழிற்சாலைகளில் பயன்படுகின்றன.

ஆடுகளை வாங்குவதற்கு முன்பு ஆடுகளுக்கு தேவையான அளவு தீவன பயிர்களை சாகுபடி செய்தல், ஆடுகளின் தரம், வயது மற்றும் நோய்கள் தாக்கப்பட்டு உள்ளனவா என்று தேர்வு செய்து வாங்க வேண்டும். சந்தை நிலவரங்களை பற்றி உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.வெள்ளாடுகள் 30 கிலோ எடையுடன் இருக்க வேண்டும். 2வது நிலை வாங்கிய வெள்ளாடுகள் சந்தையில் இருந்து வந்ததும் வீட்டின் தோட்டத்தின் அருகில் தனி தொழுவம் அமைக்கவேண்டும். ஒரு கிடாவிற்கு 10 அடி நீளம் மற்றும் 6 அடி அகலம் இருக்குமாறு அமைக்க வேண்டும்.

புது கிடா வந்ததும் ஏற்கனவே உள்ள பழைய வெள்ளாடுகளுடன் கலக்காமல் தனித் தொழுவத்தில் கட்டவேண்டும். சரியான நேரத்தில் தடுப்பூசி இடுதல், மற்றும் பூச்சி மருந்து கொடுக்க வேண்டும். மேலும் மாதத்திற்கு சராசரியாக 5 கிலோ எடை அதிகரிக்கும், 3 மாதத்திற்கு பிறகு 4550 கிலோ, 4 மாதத்திற்கு பிறகு 5055 கிலோ கிடா எடை அதிகரிக்கும். ஒரு வெள்ளாடு கிடா வாங்கும்போது 30 கிலோ எடை உள்ளதாக இருக்கவேண்டும். 3 மாதத்திற்கு பிறகு அதன் எடை சராசரியாக 50 கிலோ எடை இருக்கும். வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூலம்

பயிற்சியினை பெற்று விவசாயிகள் அனைவரும் வெள்ளாடு வளர்த்து வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய வேண்டும். இத்தகவலை பழநி வேளாண்மை அறிவியல் நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**உத்தமபாளையத்தில் விவசாயிகளுக்கு இடுபொருட்கள் விநியோகம்**

உத்தமபாளையம், :வேளாண்துறை சார்பில் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கும்விழா நடைபெற்றது. உத்தமபாளையம் வட்டாரத்தில் தேவாரம், கோம்பை, பண்ணைப்புரம் பகுதிகளில் அதிகமானஅளவில் கம்பு, சோளம் விதைக்கப்படுகிறது. இதன் பரப்பை அதிகப்படுத்தும் வகையில் கம்பு பயிர் செய்யக்கூடிய விவசாயிகளுக்கு செயல் விளக்க திடல் அமைப்பதற்கு ரூ.2 ஆயிரம் மதிப்பிலான இடுபொருட்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒரு எக்டேருக்கு ரூ. 4 ஆயிரம் வழங்கப்படுகிறது.

விவசாயிகளுக்கான இடுபொருட்கள் வழங்கும் நிகழ்ச்சிக்கு வேளாண்மை உதவி இயக்குநர் ராஜ்மனோகரன் தலைமை தாங்கினார். தேனி வேளாண்மை இணை இயக்குநர் வெங்கடசுப்பிரமணியன் இடு பொருட்களை வழங்கினார். இத்திட்டத்தில் 100 எக்டேர் பரப்பில் விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கப்படும். பின்னேற்பு மானியம் வங்கிகணக்கில் விவசாயிகள் கணக்கில் வரவு வைக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

**சேந்தன்குடியில் பயிர் மருத்துவ முகாம்**

ஆலங்குடி : ஆலங்குடி அடுத்த சேந்தன்குடியில் ரிலையன்ஸ் அறக்கட்டளை மற்றும் சேந்தன்குடி ஊராட்சி சார்பில் பயிர்மருத்துவ முகாம் நடைபெற்றது. ஊராட்சி தலைவர் கலையரசிமணிவாபாலு தலைமை வகித்தார். துணைத் தலைவர் சிவக்குமார், முன்னோடி விவசாயிகள் செந்தமிழ்ச்செல்வன், கண்ணன், ராசு ஆகியோர் முன்னிலை வகித்தனர். ரிலையன்ஸ் அறக்கட்டளை மாவட்ட மேலாளர் அன்பழகன் விளக்கவுரையாற்றினார். முகாமிற்கு விவசாயிகள் கொண்டு வந்திருந்த

தோட்டக்கலை பயிர்களான காய்கறி, மலர்கள், வாழை, தென்னை மற்றும் மக்காச்சோளம், கரும்பு பயிர்களின் பாதிக்கப் பட்ட பாகங்களை பரிசோதனை செய்து பயிர்களில் வந்த பாதிப்புகள் என்ன? எதனால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது? அதனை வரும்முன் எப்படி தடுக்கலாம்? வந்தபின் இயற்கை முறையில் எப்படிக் குணப்படுத்தலாம் என்பது குறித்து அறக்கட்டளையின் வேளாண் ஆலோசகர் குமார் ஆலோசனைகள் வழங்கினார். முடிவில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கந்தசாமி நன்றி கூறினார்.

**இயந்திர நடவு மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு ரூ.1,200 மானியம்**

திருவாரூர், : திருவாரூர் மாவட்டத்தில் இயந்திர நடவு மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ 1,200 மானியம் வழங்கப்பட உள்ளதாக மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.இதுபற்றி திருவாரூர் மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: மாவட்டத்தில் முதற்கட்டமாக குடவாசல், நீடாமங்கலம், மன்னார்குடி, வலங்கைமான் ஆகிய 4 ஒன்றியங்களில் நடப்பு சம்பா மற்றும் தாளடி பருவத்தில் இயந்திரம் மூலம் நடவு மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ1200 மானியம் வழங்கப்படும். தேசிய வேளாண்காப்பீட்டு திட்டத்தின் கீழ் வழங்கப்படும் இந்த தொகை விவசாயிகளின் வங்கி கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.